2. தகவல் கோரல்.

(அ) மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப் பெறுவது குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே ஒரு விளக்கம்பெற விரும்புகிறேன். அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டம் இலகுவாகின்ற வகையில் உரிமங்கள் அளிப்பது போன்ற பல் வேறு வகைகளிலும், சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகளை விடுவிப்பதற்கு ஆணை பிறப்பிக்கின்ற வகையிலும் புதிய அறிவிப்புக்களைச் செய்தார்கள். அதையொட்டி நேற்றைய தினம் விதிகள் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த விதிகள் திருத்தத்தோடு அந்தத் தீவிரச் சட்டம் நின்றுவிடுகிறதா அல்லது சட்டத் திருத்தங்கள் இங்கே கொண்டுவரப்பட இருக்கிறதா? ஏனென்றால் சட்டத்தினுடைய நோக்கம் வேறு. இப்போது விதிகள் திருத்தப்பட்டு நடைமுறையிலே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிற நிலை வேறு. இரண்டிற்கும் முரண்பாடு இருக்கிற காரணத்தால் சட்டம் அப்படியே நீடிக்கப்படுமேயானால் கடுமையான தண்டனைகளுக்கு நாடு கடத்தல் போன்ற தண்டனைகளுக் கெல்லாம் மக்கள் ஆளாகக்கூடிய சூழ்நிலை நாட்டிலே இருக்கிறது. எனவே சட்டம் திருத்தப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமல்படுத்தப்படுகிற மதுவிலக்குச் சட்டத்தில் சில விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. அப்படித் தளர்த்தி இருக்கிற விதிகளை மாற்றுவதற்கும் உருவாக்குவதற்கும் அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டு அந்தச் சட்டத்திற்குட்பட்டு விதிகளை மாற்ற அரசு அறிவித்து இருக்கிறது. தேவையான சட்டத் திருத்தங்களைத் தேவையான நேரத்திலே சட்டமன்றத்தின் முன்னாலே வைத்து அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்பெறும் சலுகை குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்னொரு கருத்துப் பற்றிய விளக்கமும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோர் பாதிக்கப்படுகிற அளவிற்கு பிறப்பிக்கப்பட்ட உத்திரவு திரும்பப் பெறப்படுகிறது என்று முதல் அமைச்சர் தெரிவித்த அதே நேரத்திலே 31 சதவீதம் என்பது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா ? இல்லையென்றால் எப்போது பிறப்பிக்கப்படும்?